# BSNL ஊழியர் சங்கம்

## தமிழ் மாநிலம்

**சுற்றறிக்கை எண்.** 66 **தேதி**: 18.09.2015

தோழர்களே,

நமது தமிழ் மாநிலச் சங்கத்தின் மாநில செயலக கூட்டம் 18.09.2015 அன்று சென்னை மாநிலச் சங்க அலுவலகத்தில் நடைபெற்றது. அதில் கீழ்கணட மாநில நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

1. S.செல்லப்பா
2. A.பாபுராதாகிருஷ்ணன்
3. K.சீனிவாசன்
4. M.முருகையா
5. R.மகேந்திரன்

கூட்டத்தில் கீழ்கண்ட முடிவுகள் ஏகமனதாக எடுக்கப்பட்டன.

**1. மாநில கவுன்சில்:-**

காலியாக உள்ள தமிழ் மாநில கவுன்சில் இடங்களில் கீழ்கண்ட தோழர்களை நியமிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

1) தோழர் K.சீனிவாசன் மாநில பொருளாளர்.
2) தோழர் V.வெங்கட்ராமன், மாநில துணைத் தலைவர்.
3) தோழர் C.செல்வின் சத்யராஜ், மாநில உதவி செயலாளர்.

2. **ஒப்பந்த ஊழியர் அகில இந்திய மாநாடு:-**

BSNLCCWFன் அகில இந்திய மாநாடு அக்டோபர் 3 மற்றும் 4ஆம் தேதிகளில் நாகர்கோவிலில் நடத்த முடிவு செய்யப்பட்டு அதற்கான தயாரிப்பு பணிகள் வேகமாக நடைபெற்று வருகிறது. BSNL ஊழியர் சங்க உறுப்பினர்களிடம் இருந்து தலா ரூ.50/- வசூலித்து தமிழ் மாநில BSNL ஊழியர் சங்கத்திற்கு அனுப்பிட வேண்டும் என்ற முடிவு இன்னமும் அமுல்படுத்தப்படவில்லை. கும்ப கோணம் மாவட்டம் மட்டுமே முழுமையாக செலுத்தி உள்ளது. திருச்சி ஒரு பகுதி அனுப்பி உள்ளனர். BSNL ஊழியர் மாவட்ட சங்கங்களும் 24.09.2015க்குள் மாநில சங்கத்திற்கு தங்களது கோட்டாவை நிறைவு செய்து அனுப்பிட வேண்டும்.

3. **செப்டம்பர் - 2 வேலை நிறுத்தம்**

செப்டம்பர் 2 வேலை நிறுத்தத்தை வெற்றிகரமாக்கிய அனைவருக்கும் தமிழ் மாநில சங்கத்தின் வாழ்த்துக்கள். தமிழகத்தில் மொத்தமுள்ள BSNL ஊழியர்களில் 53.06% பேர் பங்கேற்றது பாராட்டுக்குரியது. அதில் BSNL ஊழியர் சங்க மொத்த உறுப்பினர்கள், வேலை நிறுத்தத்தில் பங்கேற்றவர்கள், விடுப்பு எடுத்தவர்கள், பணிக்குச் சென்றவர்கள் ஆகிய விவரங்களை மாவட்ட சங்கங்கள் மாநில சங்கத்திற்கு கொடுக்க வேண்டும்.

ஒப்பந்த ஊழியர் மாநாடு நிதி மற்றும் செப்டம்பர் 2 வேலை நிறுத்த விவரங்களை சேகரிப்பதற்கு கீழ்கண்ட மாநில செயலக தோழர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

| | | |
|---|---|---|
| A.பாபுராதாகிருஷ்ணன் | - | நீலகிரி, கோவை, ஈரோடு, சேலம், தருமபுரி |
| R.மகேந்திரன் | - | கடலூர், பாண்டி, வேலூர், CGM (O) சென்னை |
| K.சீனிவாசன் | - | கும்பகோணம், தஞ்சாவூர், திருச்சி, காரைக்குடி |
| M.முருகையா | - | மதுரை, விருதுநகர், தூத்துக்குடி, திருநெல்வேலி, நாகர்கோவில் |

4. **மகளிர் பயிலரங்கம்:-**

BSNL ஊழியர் சங்கம் மற்றும் BSNL WWCC சார்பாக மகளிர் பயிலரங்கம் சென்னையில் நவம்பர் மாதத்தில் நடத்துவது என்று முடிவு எடுக்கப்பட்டுள்ளது. அதற்கான ஏற்பாடுகளை சென்னை தலைமை பொது மேலாளர் அலுவலக மாவட்ட சங்கம் ஏற்பாடு செய்யும்.

5. அம்பேத்கார்-125

தமிழக தீண்டாமை ஒழிப்பு முன்னணியின் மாநிலக் அறைகூவலான “அம்பேத்கார்-125” விழாவை மிகச் சிறப்பாக டிசம்பர் 7ம் தேதியன்று அனைத்து மாவட்டங்களிலும் நடத்துவது என முடிவு செய்யப்பட்டுள்ளது. அனைத்து கிளைகளிலும் நமது சங்கங்களின் சார்பாக அம்பேத்கரின் உருவப்படத்திற்கு மரியாதை செய்வதை ஒரு விழாவாக நடத்த வேண்டும். சாத்தியமான இடங்களில் கருத்தரங்கம்/ சிறப்புக் கூட்டம் ஆகியவற்றை நடத்த வேண்டும்.

தோழமையுள்ள,

**(A.பாபு ராதாகிருஷ்ணன்)**
மாநில செயலாளர்.